**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

# IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 76/2025 |
| Deposition of Witness | : | PW– 1 |
| Name | : | சக்திவேல் |
| Father Name | : | பழனிச்சாமி |
| Village | : | சிவியார்பாளையம் |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 56 |

Accused Present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06.04.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவியார்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்தது எனது மகன் ஆவார். கடந்த 21.01.2025 காங்கேயம் – சென்னிமலை ரோடு, திட்டுப்பாறை எனது மகன் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி அவரது இருசக்கர வாகனமான ஹீரோஹோண்டாவில் சென்று ரோட்டைக்கடக்கும்போது அவருக்கு எதிரே வடக்கு இருந்து தெற்கு நோக்கி வந்த மாருதி ஸ்விட் கார் மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு எனது அண்ணன் மகன் பிரகாஷ் போன் மூலம் தகவல் சொன்னார். விபத்தில் எனது மகனுக்கு கால், உடம்பு போன்ற இடங்களில் பலத்த அடிபட்டிருந்தது. பின்னர் தனியார் ஆம்புலன்ஸ்க்கு அருகில் இருந்தவர்கள் தகவல் சொல்லி காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக கூறினார்கள். பின்னர் நான் சென்று பார்த்தபோது மேல்சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல பரிந்துரைத்தார்கள். நான் விபத்து சம்பந்தமாக காங்கேயம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான். அந்த புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இரண்டு நாட்கள் சிகிச்சை பெற்று வந்த எனது மகன் 25.01.2025 ஆம் தேதியன்று சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். எனது மகனின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணையின்போது சாட்சியாக உடனிருந்தேன். போலீசர் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தகவல் கேட்டுத்தான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். எனது மகன் இறந்ததற்கான நஷ்ட ஈடாக ஆஜர் எதிரியிடம் இருந்து ரூ.7,00,000/– பணமாக பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். வாகன விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி பொய்யான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.04.06 18:13:49 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 76/2025 |
| Deposition of Witness | : | PW– 2 |
| Name | : | தாரணி |
| Husband Name | : | கண்ணன் |
| Village | : | ஆறுதொழுவு |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 30 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06.04.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆறுதொழுவில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் இறந்தது எனது கணவர் ஆவார். கடந்த 21.01.2025 காங்கேயம் – சென்னிமலை ரோடு, திட்டுப்பாறை எனது மகன் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி அவரது இருசக்கர வாகனமான ஹீரோஹோண்டாவில் சென்று ரோட்டைக்கடக்கும்போது அவருக்கு எதிரே வடக்கு இருந்து தெற்கு நோக்கி வந்த மாருதி ஸ்விட் கார் மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு எனது உறவினரான பிரகாஷ் போன் மூலம் தகவல் சொன்னார். விபத்தில் எனது மகனுக்கு கால், உடம்பு போன்ற இடங்களில் பலத்த அடிபட்டிருந்தது. பின்னர் தனியார் ஆம்புலன்ஸ்க்கு அருகில் இருந்தவர்கள் தகவல் சொல்லி காங்கேயம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக கூறினார்கள். பின்னர் நான் சென்று பார்த்தபோது மேல்சிகிச்சைக்காக திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்ல பரிந்துரைத்தார்கள். விபத்து சம்பந்தமாக எனது மாமனார் காங்கேயம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். பின்னர் இரண்டு நாட்கள் சிகிச்சை பெற்று வந்த எனது கணவர் 25.01.2025 ஆம் தேதியன்று சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். எனது கணவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணையின்போது சாட்சியாக உடனிருந்தேன். போலீசர் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

விபத்து பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தகவல் கேட்டுத்தான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். எனது கணவர் இறந்ததற்கான நஷ்ட ஈடாக ஆஜர் எதிரியிடம் இருந்து ரூ.7,00,000/- பணமாக பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். வாகன விபத்து நஷ்ட ஈடு பெறவேண்டி கொடுக்கப்பட்ட பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.04.06 18:13:57 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII, Cr.P.C.)**

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, KANGEYAM

| | | |
|---|---|---|
| Case No. | : | CC – 76/2025 |
| Deposition of Witness | : | PW– 3 |
| Name | : | சண்முகம் |
| Father Name | : | கோவிந்தசாமி |
| Village | : | ஆறுதொழுவு |
| Taluk | : | காங்கேயம் |
| Age | : | 58 |

Accused present.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06.04.2026

**முதல் விசாரணை**

நான் தற்போது ஆறுதொழுவில் குடியிருந்து வருகிறேன். நான் காங்கேயம் – சென்னிமலை ரோடு, திட்டுப்பாறை அருகே நானும், எனது நண்பரும் காலை 10 மலையளவில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது போலீசார் விபத்து நடந்த சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். அதில் நானும் என்னுடன் ராஜ்குமார் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

அ.சா.1 மற்றும் 2 எனக்கு பழக்கமான நபர் என்பதால் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2026.04.06 18:14:03 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்